கடந்த காலத்தை விட உயர்கல்வித் துறையில்

# 42 புதிய கல்லூரிகளை திராவிட மாடல் அரசு கொண்டு வந்துள்ளது!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்க்கு அமைச்சர் முனைவர் கோவி.செழியன் விளக்கம்!



சென்னை, பிப். 20- சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியபோது குறுக்கிட்டு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் பேசியதாவது:-

இறுதியாண்டு படிக்கக் கூடிய மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகிற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, சுமார் 7.5 இலட்சம் பேருக்கு வழங்கி கொண்டிருக்கிறோம். 20 இலட்சம் பேருக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலங்களில் நாங்கள் கொடுத்தோம் என்று எதிர்க்கட்சித் தலைவரும், மாமன்ற உறுப்பினரும் சொன்னார்கள். பள்ளிக் கல்வி படிக்கின்ற +2 மாணவர்களுக்கு வழங்கினீர்கள். படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்குச் சென்று தேடி, தேடி கொடுத்த கால நீட்டிப்பும் நமக்குத் தெரியும். இடையில் நிறுத்தப்பட்டதும் தெரியும். ஆனால், முதல் இரண்டாண்டுகள் கொரோனா தொற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உங்களுக்குப் புரியும். பாழ்பட்டு கிடந்த தமிழ் நாட்டை, பொருளாதாரத்தை சீராக்கி மடிக்கணினியை கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வந்தபோது, 10 இலட்சம் பேருக்கு உத்தரவிட்டு, அதனை வழங்கிக் கொண்டிருக்கின்ற முறையான அரசு, இந்த அரசு. ஓட்டுக்காக தந்தீர்களே, இது வாக்கிற்காகத்தானே என்று சொல்கிறீர்கள். தாய் தந்தையரை இழந்த பச்சிளம் குழந்தைகளுக்கு 18 வயது வரை 2,000 ரூபாய், அந்தக் குழந்தையினுடைய உயிர் காக்கின்ற நலத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதென்ன ஓட்டுக்காகவா? மற்றும் ஒன்று. உயர் கல்வியில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படவில்லையே என்று மூத்த சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் அவருக்கு தெரிவிக்க விரும்புவது, நீங்கள் கொண்டு வந்த மருத்துவக் கல்லூரி, செயல்படத் தொடங்கியது யாருடைய ஆட்சியில்? கட்டுமானப் பணி, கட்டடங்கள் கட்டப்பட்டது யாருடைய ஆட்சியில்? ஆண்டுக்கு 600 மாணவர்கள் சேர்க்கப்பட்டது யாருடைய ஆட்சியில்? அதைவிட மேலாக உயர் கல்வித் துறையில் கடந்த காலத்தைவிட கிட்டத்தட்ட 42 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொண்டு வந்தது, திராவிட மாடல் அரசு, அதன் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர். வேளாண் துறையின் சார்பில் 4 கல்லூரிகள், சட்டக் கல்லூரி ஒன்று; ஆக, இவ்வளவு கல்லூரிகளை நாங்கள் கொண்டு வந்தோமே, கடந்த காலத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டதா? சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டதா? வேளாண் கல்லூரி தொடங்கப்பட்டதா? எனவே, முதல் இடத்திற்கு கொண்டு வருவதற்கு காரணம் நம்முடைய அரசு. (குறுக்கீடுகள்)

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

---

கீழ்வேளூர் – கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில்

# உயர் தொழில் நுட்ப ஆய்வகம் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது!

## சட்டப் பேரவையில் உறுப்பினர் வி.பி, நாகை மணி கேள்விக்கு அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பதில்!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் வி.பி.நாகை மணி கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில்களும் வருமாறு:

வி.பி.நாகை மணி : கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கணினி மற்றும் அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கடந்த 13 ஆம் தேதியன்று *sun rise* ஆகின்ற நேரத்திலே நாட்டு மக்களுக்கு *sweet surprise* கொடுத்த முதலமைச்சர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய அனுமதியோடு விடை நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் நலன் கருதி பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2025-2026 ஆம் ஆண்டிற்கு கணினி உயர் தொழில் நுட்ப ஆய்வகம் ஒன்றும், வகுப்பறை ஒன்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 50 சதவிகித கட்டடப் பணிகள் முடிவடைந்து, இதரப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அறிவியல் ஆய்வகத்திற்கான கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. வரும் கல்வியாண்டில் அறிவியல் ஆய்வகமும் கட்டித்தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வி.பி. நாகைமாலி: எனது கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 3 வகுப்பறைகள் முடிந்துவிட்டன. 2 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 10 கணினியும் கொடுக்கப்பட்டு, அறிவியல் ஆய்வகமும் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், எனது தொகுதி குறிச்சி அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, ஏறக்குறைய 4 ஆண்டுகள் ஆகின்றன.

ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: தரமுயர்த்துவது சம்பந்தமான கேள்வியை அண்ணன் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே *first phase*ல், *set of schools*க்கு *clearance* கொடுத்து தரமுயர்த்திருக்கிறோம். கண்டிப்பாக உங்களுக்கே தெரியும், அடுத்த ஜூன் மாதத்தில் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் நம்முடைய தமிழநாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமையும். கண்டிப்பாக *second phase*ல் யார் யாருக்கெல்லாம் இந்தக் கோரிக்கைகள் இருக்கிறதோ, அவை முழு மனதாக தரமுயர்த்தப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வி.பி. நாகைமாலி: தரமுயர்த்தப்படும் என்று உறுதியளித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

திண்டிவனம் தொகுதியில் – ஆதி திராவிடர் நலத்துறை சார்பில்

# ரூ.10 கோடி மதிப்பில் பல்வேறு திட்டப் பணிகள்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தகவல்!



சென்னை, பிப். 20- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் திண்டிவனம் தொகுதியில் ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் ரூ.10 கோடி மதிப்பிலான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

திண்டிவனம் தொகுதி, அன்னம்பாக்கம் ஊராட்சியில் உள்ள இருளர் குடியிருப்பிற்கு சாலை வசதி அமைக்க அரசு முன்வருமா? என்று உறுப்பினர் பொ.அர்ஜுனன் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் அளித்த பதில் வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், அன்னம்பாக்கம் கிராமம் புல எண் 83/7ல் அரசு புஞ்சை நிலம் 68 ஏர்ஸ் தரிசு என வகைப்பாடு செய்யப்பட்டு, 18 இருளர் இன குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி நிலத்தில் 9 குடும்பங்கள் மட்டுமே தகரக் கூரையில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர். இந்நிலையில் 7 இருளர் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு *PM JANMAN* திட்டத்தின்கீழ் அன்னம்பாக்கம் கிராமத்தில் கிராம நத்தம் புல எண் 40/79 முதல் 40/85 வரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகளின் கட்டுமானப் பணிகள் இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்படும். மேலும், இரண்டு குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வருவாய் கோட்டாட்சியர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டவுடன், இவர்களுக்கு *PM JANMAN* திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித்தரப்படும். மேலும், குடியிருப்புப் பகுதிகளில் பயனாளிகள் குடியேறுவதற்கு முன் இணைப்பு சாலை செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது உள்ள இருளர் குடியிருப்புப் பகுதிக்கு நடந்து சென்றுவர வயல் வெளி பாதை மட்டுமே உள்ளது. இப்பாதையில் வாகனங்கள் செல்ல இயலாது. இதைக் கருத்தில் கொண்டுதான் அதேகிராமத்தில் ½ கி.மீ. தூரத்தில் வேறு இடம் கண்டறியப்பட்டு, வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது புதிதாக குடியிருக்கும் பகுதிக்கு தரமான சாலை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

உறுப்பினர் அவர்களின் சொந்த தொகுதியான திண்டிவனத்தில் கிட்டத்தட்ட ரூ.10 கோடி மதிப்பீட்டிலான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைச் சார்பாக பல்வேறு பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருங்காலங்களில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலளித்தார்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்று கலந்துரையாடினார். உடன் கழக நிர்வாகிகள் மா.செல்லதுரை, அப்துல் காதர், டாக்டர்.கலை கதிரவன், கனிமொழி, கென்னடி, ஆறுமுகச்சாமி, ஷேக் தாவுது உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

---

அ.தி.மு.க. ஆட்சியில் 1.79 கோடி மெட்ரிக் டன் தான்! திராவிட மாடல் ஆட்சியில்

# 2.15 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை!

## சட்டப் பேரவையில் அர.சக்கரபாணி பெருமிதம்!

**சென்னை, பிப். 20- சட்டப் பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது எதிர்க்கட்சியினர் பேசியபோது உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி குறுக்கிட்டு பேசியதாவது:-**

இதுசம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்களும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2210 2025 சென்று பார்க்கிறார்கள். பார்க்கும்போது என்னவென்றால், தஞ்சாவூர் மாவட்டம், காட்டூர் நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் 22 102025 அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் வரவுக்கோட்டை கிராமத்தைச் சார்ந்த திருமதி பூங்கொடி மற்றும் அவரது மாமியார் திருமதி வீரம்மாள் ஆகியோர் தங்களது நெல் மூட்டைகள் மழையில் நனைந்துவிட்டதாக, முளைத்த நெல்லுடன் புகார் தெரிவித்தனர்.

மேற்படி புகார் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகார் தெரிவித்த பெண்ணின் வயலிற்கே நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதில், 5 ஏக்கர் குத்தகை நிலத்தில் விவசாயம் மேற்கொண்டுவரும் அவர்களின் வயலில், புகார் தெரிவிக்கப்பட்ட நாள் வரை எந்த அறுவடைப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரிய வந்தது. அறுவடை நடைபெறாத நிலையில் அந்த வயலிலிருந்து நெல் கொள்முதல் நிலையத்திற்கு எவ்வாறு நெல் கொண்டுவர முடியும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. மேலும், அறுவடை செய்யப்படாத வயலிலிருந்து முளைத்த நெல்லை எவ்வாறு காண்பிக்க முடியும் என்று சந்தேகத்திற்குரியதாக உள்ளதை துறையின் ஆய்வின்மூலம் கண்டுபிடித்தனர். குறிப்பாக, உங்களிடம் வந்து, உங்கள் இயக்கத் தோழர்கள், நீங்கள் வந்த சமயத்தில் ஆர்வக் கோளாறு காரணமாக, அந்த பதறில், அதாவது DPCல் (குறுக்கீடு) நான் சொல்வது உண்மை.

தமிழ்நாட்டில் குறுவைப் பருவத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்கு பின்பு, கடந்த காலத்தில் அக்டோபர் மாதத்தில்தான் நெல் கொள்முதல் செய்வார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள், இந்திய பிரதம மந்திரி அவர்களுக்கு கடிதம் எழுதி, அக்டோபர் மாதம் மழை வருகிறது. செப்டம்பர் 1 ஆம் தேதியே ஒன்றிய அரசு உயர்த்தப்படுகின்ற விலையிலிருந்து, அதேமாதிரி தமிழ்நாட்டினுடைய ஊக்கத்தொகையையும் உயர்த்தி வழங்கியதன் காரணமாக, கடந்த உங்களுடைய



ஆட்சிக் காலத்திலே 1 கோடியே 79 இலட்சத்து 811 மெட்ரிக் டன்தான் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று 57 மாதங்களில், நேற்றுவரை சுமார் 2 கோடியே 15 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்திருக்கிறோம். பத்து வருடங்களில் நீங்கள் செய்யாத சாதனையை, 57 மாதங்களில் நெல் கொள்முதல் செய்து நாங்கள் செய்துள்ளோம். குறிப்பாக, குறுவைப் பருவத்தில் என்றுமில்லாத அளவிற்கு சாதனையாக 14 இலட்சத்து 78 ஆயிரத்து 546 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. சென்ற ஆண்டு குறுவைப் பருவ கொள்முதலான 5 இலட்சத்து 26 ஆயிரத்து 533 டன்னை ஒப்பிடும்பொழுது கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகமாகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில், இது 18.2 சதவிகிதம் கூடுதலான அளவு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### ஆயிரம் மூட்டை நெல் வாங்குகிறோம்!

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செல்லும்போது, ஒரு நாளைக்கு 600 மூட்டைகள், 800 மூட்டைகள் வாங்குவதாக சொன்னார்கள். நாங்கள் ஆயிரம் மூட்டை வாங்குகிறோம். அதே சமயத்தில் ஒரு DPCல், 1 machineக்கு பதில் 2 machines, 3 machines போட்டு 2,000 மூட்டைகள், 3,000 மூட்டைகள் வாங்குகிறோம். மாலை 6 மணியிலிருந்து இரவு 8 மணி வரைக்கும் கூட நெல் கொள்முதல் செய்கிறோம். அதேசமயத்தில் உங்கள் ஆட்சியில் ஒரு சுற்றறிக்கை மட்டும்தான் வெளியிட்டிருந்தீர்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு அதற்கு அரசாணையே வெளியிட்டு, இன்றைக்கு தினந்தோறும் ஆயிரம் மூட்டைகள் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஞாயிற்றுக்கிழமையும் நெல் மூட்டைகள் வாங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இப்படி இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு நீங்கள் செல்லும்போது நானும் அங்கே வந்திருந்தேன். அக்டோபர் மாதம், 16 ஆம் தேதி வானிலை அறிக்கையில் என்ன சொல்கிறார்களென்றால், இந்தாண்டு வடகிழக்குப் பருவ மழை அக்டோபர் 16 ஆம் தேதி ஆரம்பிக்கப்படும் என்று சொன்ன சமயத்திலேயே, அன்றைக்கு காந்தி ஜெயந்தி, அக்டோபர் 2 ஆம் தேதி அன்று அரசு விடுமுறை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு காணொலி வாயிலாக கூட்டத்தை நடத்தி, அக்டோபர் 16 ஆம் தேதியிலிருந்து மழை வருவதுபோன்று இருப்பதாக வானிலை அறிக்கையில் சொல்கிறார்கள். ஆகையால், நீங்கள் வாங்குகிற நெல்லை பத்திரமாக பாதுகாக்க வேண்டும்; வாங்கிய நெல்லை உடனடியாக குடோனிற்கு கொண்டு செல்ல வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் 8, 9, 10, 11 ஆகிய நான்கு நாட்கள், நானும், எங்கள் துறையின் செயலாளர், நிர்வாக இயக்குநர், கமிஷனர் ஆகிய நான்கு பேர்களுமே சென்று, அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர், விவசாய சங்கப் பிரதிநிதிகள், எங்கள் துறை அதிகாரிகள் எல்லோரையும் அழைத்து, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வு செய்துவிட்டு வந்தோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கொள்முதல் செய்யப்பட்ட நெல் பத்திரமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை. (குறுக்கீடு) சொல்லுங்கள், இதேமாதிரி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் (குறுக்கீடு) ஒரு நிமிடம். . . .

செறிவூட்டப்பட்ட அரிசி என்னவென்றால் ஒன்றிய அரசு, அதாவது ஜூலை மாதம் 29 ஆம் தேதி புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வருகிறது. நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்களும், fortified riceக்கு ஆகஸ்ட் மாதத்தில் அனுமதி வந்துவிட்டது என்று சென்னையில் பேட்டிக் கொடுக்கிறார்கள்., ஆனால் அப்படி அனுமதியே வரவில்லை. 297 2025 அன்று ஒன்றிய அரசு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சொல்கிறேன். அதாவது செறிவூட்டப்பட்ட அரிசிக்கு, நீங்கள் என்ன சொல்கிறீர்கள். ஒன்றிய அரசு 2972025 புதிய வழிகாட்டு நெறிமுறைளை வெளியிட்டது. அதன் பிறகு ஆகஸ்ட் மாதத்தில் தான், நாங்கள் tender விடுகிறோம். Tender விட்டு, 34 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு 5 நிறுவனங்களுக்கு அதாவது Committee, Tender Committee ஒப்புதல் கொடுக்கிறார்கள். அதன்பிறகு டெல்லியில் இருந்த வந்த அதிகாரிகள், அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். கொடுக்காததை, கொடுத்ததாக அதன்பிறகு அந்த அரிசியை ஒன்றிய அரசு என்ன சொல்லிவிட்டது என்றால் இந்தியா முழுவதும் இருக்கின்ற (குறுக்கீடு) சொல்கிறேன், எல்லோரும் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

இந்தியா முழுவதும் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் 100 கிலோவிற்கு ஒரு கிலோ செறிவூட்டப்பட்ட அரிசியை கலக்கவேண்டுமென்று ஒரு விதி வந்துவிட்டது. அதனால், அதையெல்லாம் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முன்னாள் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஒன்றிய அரசு ஆகஸ்ட் மாதத்தில் அனுமதி கொடுத்துவிட்டது என்று சொல்கிறார்கள், தவறான தகவலை சொல்கிறார்கள். அதனால் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய பிரதம மந்திரிக்கு கடிதம் எழுதிய காரணத்தினால் அவர்கள், அதற்காக உடனடியாக நிறைய தளர்வுகளை கொடுத்தார்கள். ஏனென்றால் sample எடுத்தால் டெல்லிக்கு எடுத்துச் சென்றுதான் laboratoryல் check up செய்யமுடியும். ஆனால், முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தினால், நீங்கள் சென்னையில் sample test செய்து கொள்ளுங்கள் ஒன்றிய அரசாங்கம் சொன்னது. அதேமாதிரி 11 கிலோ மூட்டை என்று இருந்ததை 25 கிலோ மூட்டையாக மாற்றிக்கொள்ளுங்கள், 25 கிலோ மூட்டையை 50 கிலோ மூட்டையாக மாற்றிக்கொள்ளுங்கள், அதேமாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையெல்லாம், அதை ஒன்றிய அரசு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் செறிவூட்டப்பட்ட அரிசி இப்போது நிறைய வருகிறது. நாங்கள் வாங்கிய நெல்லையெல்லாம் அரைத்துக்கொண்டிருக்கிறோம். அதாவது எந்த நெல்லும் குறுவை பருவத்தில் சேதமடையவில்லை. இன்றைக்கு அதையெல்லாம் அரசு நல்லமுறையில் அரைத்துக்கொண்டிருக்கிறது. அதை பத்திரமாக பாதுகாத்து வைத்துக்கொண்டிருக்கிறோம், அதை அரைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

---

அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல

# பெருமையின் அடையாளம் என்பதை நாங்கள் நிலை நாட்டி இருக்கிறோம்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, பிப். 20– சட்டப் பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க் கட்சியினருக்கு பதிலளித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுபையில் அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, பெருமையின் அடையாளம் என்பது நாங்கள் நிலை நாட்டி இருக்கிறோம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதுகுறித்து பேரவயையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:– digital சார்ந்திருக்கிற infrastructure என்பது extension of social justice என்று நாம் சொல்லலாம். கிராமப் பகுதியைச் சார்ந்து இருக்கின்றவர்களுக்கும் இதுபோன்ற technology சார்ந்த அறிவைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பல முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இப்போது laptop பற்றி எல்லோரும் பேசும்போது, school students்க்கு எல்லாம் நாங்கள் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். 2019 ஆம் ஆண்டில் 2 இலட்சம் laptopஐ கொடுக்க முடியாமல்தான் அவர்கள் போனார்கள். அதற்கு பல காரணங்களை அவர்கள் சொன்னார்கள்; practical ஆகவும் நிறைய பேசினார்கள். இங்கே பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், முனுசாமி அவர்கள் சொல்லும்போதுகூட, infrastructure சார்ந்து, laptop சார்ந்து பல்வேறு கருத்துகளை தெரிவித்தார்கள். ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய school studentsக்கு கிட்டத்தட்ட 520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8,609 High Schools and Higher Secondary Schools எல்லா இடங்களிலும் Hitech labs முழுமையாக கொண்டு வந்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல கிட்டத்தட்ட 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,931 Schoolsல் smart boards கொண்டு வந்து விட்டோம். உலகத்தில் எந்த trend வந்தாலும், அடுத்த வருடம் எங்கள் பிள்ளைகள், அதை உடனடியாக பள்ளிக்கூடத்தில் பார்க்கும்படியாக எல்லா



infrastructureயையும் நாங்கள் கொண்டு வந்துவிட்டோம். Laptop என்று வரும்போது வெறுமனே laptop மட்டும் கொடுத்தோமா! அதில் Perplexity AI Pro என்கிற ஒரு மிகப் பெரிய softwareஐ கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட அதன் ஒரு மாதத்திற்கான subscription மட்டும் 1,950 ரூபாய்; அதற்கடுத்த 6 மாத subscription சேர்த்து கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு ஒரு laptopஐ ஒரு மாணவன் வைத்திருக்கிறான் என்று சொன்னால், he becomes an entrepreneur, ஒரு startup entrepreneur ஆகவே ஆகிவிடலாம். அந்த அளவிற்கு ஒவ்வொன்றையும் பார்த்து, பார்த்து தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களும், அது சார்ந்திருக்கிற Special Programme Implementation Department–யை கண்காணிக்கக்கூடிய நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களும் அதை பார்த்து, பார்த்து கொடுத்திருக்கிறோமே தவிர அதனை வேறு விதமாக எதுவும் திருப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, 7.5 சதவிகிதம் குறித்து சொல்லும்போது மிக அழகாக சொன்னார்கள். 7.5 சதவிகித இட ஒதுக்கீடு மருத்துவம் சார்ந்து நாங்கள் கொண்டுவந்தோம் என்று சொன்னார்கள். போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்திய பல நேரங்களில் இங்கே 'The Hindu' paperல் நாம் காண்பித்தி ருக்கிறோம். சரி, எல்லோரும் சேர்ந்து இன்றைக்கு இந்த மாணவர் சமுதாயம் நன்றாக இருக்க வேண்டுமென்று கொண்டு வந்துவிட்டோம். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 7.5 இட ஒதுக்கீடு மருத்துவத்திற்கு மட்டும் இருக்கக்கூடாது, அது தொழிற்கல்வி சார்ந்து, அண்ணன் சொன்னதுபோன்று அது சட்டமாக இருந்தாலும் சரி; (மேசையைத் தட்டும் ஒலி) மீன்வளமாக இருந்தாலும் சரி; (மேசையைத் தட்டும் ஒலி) Agriculture ஆக இருந்தாலும் சரி; Engineering ஆக இருந்தாலும் சரி; எல்லாவற்றிற்கும் பொருத்தி, கொண்டு போக வேண்டுமென்று தான் நாங்கள் ஆசைப்படுகிறோம். கொண்டு வருகிற திட்டம் நல்ல திட்டம், அதை அவர்கள் கொண்டு வந்துவிட்டார்கள் என்று மூடி மறைக்க வேண்டும் என்றில்லாமல் அதனை அடுத்தக்கட்டத்திற்கு எப்படி கொண்டு போக வேண்டுமென்று தான் நம்முடைய அரசாங்கம் நினைக்கிறது. அதுமட்டுமல்ல, அதன் counsellingக்காக பஸ் பிடித்து வந்தாலும்கூட, அதற்கான பஸ் செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; அவர்களுக்கான hostel செலவையும் சேர்த்து நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; அவர்களுக்கான கல்விக் கட்டணம் முழுவதையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது என்று நாங்கள் சொல்கிறோம்.

Premium Institutions சேர்ந்தது பற்றிகூட நம்முடைய முனுசாமி அவர்கள் பேசும்போது சொன்னார், இதன் மூலமாக பல பேர், பல உயர் கல்விகளில், ஏன் MMCல்கூட சேர்ந்திருக்கிறார்கள் என்றுகூட சொன்னார்கள். ஆனால், Premium Institutions என்று பார்க்கும்போது அத்திப் பூத்தது போன்று நம்முடைய அரசுப் பள்ளி சேர்ந்த 2, 3 மாணவர்கள் சேர்ந்தது பெரிய விஷயமாக இருந்தது. ஆனால், 2021 ஆம் ஆண்டிற்குப் பிறகு Model School என்ற conceptஐ நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்ட வந்த பிறகு, ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் இருக்கக்கூடிய IIT ஆக இருந்தாலும், IIM ஆக இருந்தாலும், NIFT ஆக இருந்தாலும், NIFTEM ஆக இருந்தாலும் Law University ஆக இருந்தாலும் சரி; பிள்ளைகளுக்கு JEE என்றால் என்னவென்று தெரியாமல் இருந்தார்கள்; CLAT என்றால் என்னவென்று தெரியாமல் இருந்த பிள்ளை களுக்கும் அந்த அறிவைக் கொடுத்து கிட்டத்தட்ட இந்த 4 வருடத்தில் அத்தி பூத்தது போன்று 2, 3 மாணவர்கள் என்று சொன்னீர்கள். அரசுப் பள்ளி மாணவர்களை மட்டும் பார்த்தோமென்றால் கிட்டத்தட்ட 2,853 பிள்ளைகள் இன்று உலகம் முழுக்க படிக்கிற அளவிற்கு நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதனால்தான் அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல; பெருமையின் அடையாளம் என்பதை நாங்கள் நிலைநாட்டி கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்து பேசினார்.